**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 448** **நாள்: 07.09.2026**

**மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. ஆர். குமார் அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட கம்பர் தெருவில் வசிக்கும் பொதுமக்களை இன்று நேரில் சந்தித்து, குறைகள் குறித்து கேட்டறிந்து அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-178, கம்பர் தெருவில் வசிக்கும் பொதுமக்கள் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவது தொடர்பாகவும், மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாகவும் மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. ஆர். குமார் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள், அண்ணா திடல், கம்பர் தெருவில் வசிக்கும் பொதுமக்களை இன்று (07.09.2026) நேரில் சந்தித்து கலந்துரையாடி, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியம் உள்ளிட்ட சேவைத்துறைகள் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு, இப்பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்கவும், குடிநீரில் கழிவுநீர் கலப்பதை தடுத்து தரமான குடிநீர் வழங்குவதை உறுதிசெய்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், அடையாறு மண்டலத்தில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அனைத்து வாகனங்கள், இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் ஆகியவற்றை தயார்நிலையில் வைத்திடவும், தொடர்புடைய பிற நடவடிக்கைகளை மேற்காள்ளவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மேற்பார்வை பொறியாளர் திரு.முரளி, மண்டல அலுவலர் திரு.என்.காளிதாஸ், மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**